தினமணி

**கரும்புக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிலுவைத் தொகை வழங்கக் கோரிக்கை**

First Published : 11 Jun 2010 10:06:33 AM IST

தேனி, ஜூன் 10:தேனி மாவட்டத்தில் 2002-03-ம் ஆண்டு கரும்பு அரவைப் பருவத்துக்கு அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஆதார விலை நிலுவைத் தொகை வழங்க வேண்டும் என்று தேனியில் நடைபெற்ற முத்தரப்புக் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

கரும்பு விவசாயிகளின் பிரச்னை குறித்து மாவட்ட நிர்வாகம், தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகம், விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்ட முத்தரப்புக் கூட்டம் தேனியில் மாவட்ட ஆட்சியர் பூ. முத்துவீரன் தலைமையில் நடைபெற்றது.

விவசாயிகள் பேசியதாவது:

2009-10-ம் ஆண்டு கரும்பு அரவைப் பருவத்துக்கு அரசு அறிவித்துள்ளதைவிட, குறைந்த விலை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. விவசாயிகளின் ஒப்புதல் இல்லாமல் வெட்டுக் கூலியாக டன் ஒன்றுக்கு ரூ. 350 நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கரும்பு வெட்டுவதில் பதிவு மூப்பு கடைப்பிடிக்கப் படுவதில்லை. பருவம் கடந்த நிலையிலும், கரும்பு வெட்டப்படுவதில்லை. கரும்பை வெட்டிய பின்பு லாரியில் ஏற்ற கால தாமதம் செய்வதால் எடை குறைவு ஏற்படுகிறது. 2002-03-ம் ஆண்டு கரும்பு அரவைப் பருவத்துக்கு மத்திய அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஆதார விலை நிலுவைத் தொகையை ஆலை நிர்வாகம் வழங்க வேண்டும் என்றனர்.

ஆலை நிர்வாகம் சார்பில் அதன் பிரதிநிதிகள் கூறியதாவது:

2009-10-ம் ஆண்டு கரும்பு அரவைப் பருவத்துக்கு அரசு நிர்ணயித்துள்ளவாறு டன் ஒன்றுக்கு ரூ. 1,725 வழங்கப்படுகிறது. வெட்டுக் கூலி குறித்து கரும்பு விவசாயிகளும், கரும்பு வெட்டுக்காரர்களும் கலந்து பேசி, கூலி நிர்ணயம் செய்கின்றனர். பதிவு மூப்பு அடிப்படையிலும், உரிய பருவத்திலும் கரும்பு வெட்டப்படுகிறது. 2002-03-ம் ஆண்டு அரவைப் பருவத்துக்கு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய கரும்பு விலை நிலுவைத் தொகை எதுவும் இல்லை என்றனர்.

மாவட்ட ஆட்சியர் பேசுகையில், குறைந்தபட்ச ஆதார விலை நிலுவைத் தொகை குறித்து உரிய அரசாணை பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**பலத்த காற்றால் வாழை இலைகள் சேதம்**

First Published : 11 Jun 2010 11:57:46 AM IST

பல்லடம், ஜூன் 10: பல்லடம் பகுதியில் வீசும் பலத்த காற்றால், வாழை இலைகள் சேதம் அடைந்துள்ளன. வாழை விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
பல்லடம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியில் வாழை சாகுபடி 2 ஆயிரம் ஏக்கர் பரப்புக்கு மேல் செய்யப்படுகிறது. நடவு செய்ததிலிருந்து 6 மாதத்தில் வாழை பலன் அளிக்கத் துவங்கும். 10 நாட்களுக்கு ஒரு குருத்து உற்பத்தியாகும்.
பலன் அளிக்கும் நாளிலிருந்து 3 நாளுக்கு ஒரு முறை ஒரு ஏக்கரில் 100 எண்ணிக்கை கொண்ட 7 கட்டு வாழை இலைகள் கிடைக்கும்.
தற்போது பலத்த காற்று வீசுவதால் 30 சதம் வாழை இலைகள் கிழிந்து சேதம் அடைந்துள்ளன. இதனால் பல்லடம் பகுதியில் சந்தைக்கு வாழை இலை வரத்து மிகவும் குறைந்துள்ளது.
கடந்த வாரம் திருமணம் போன்ற சுப காரியங்கள் காரணமாக வாழை இலை விலை உயர்ந்து இருந்தது. ஒரு கட்டு (100 இலைகள்) ரூ. 600-க்கு விற்றது. தற்போது ரூ. 300-க்கு தான் விற்பனையாகிறது. அதே சமயம் வாழை இலைகளும் காற்றால் சேதம் அடைந்து இருப்பதால், வாழை இலை சாகுபடி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
பல்லடம் பகுதியில் ரூ. 6 லட்சம் மதிப்புள்ள வாழைகள் காற்றால் சேதம் அடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறையினர் ஆய்வு செய்து இழப்பீடு வழங்க வேண்டும் என்று வாழை சாகுபடி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**தோட்டக்கலைத் திட்டங்கள்: ஒசூரில் ஆந்திர அதிகாரிகள் பார்வை**

First Published : 11 Jun 2010 10:37:32 AM IST

ஒசூர், ஜூன் 10: கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் தோட்டக்கலை மூலம் செயல்படுத்தி வரும் திட்டங்களை ஆந்திர தோட்டக்கலை அதிகாரிகள் வியாழக்கிழமை பார்வையிட்டனர்.
ஆந்திர மாநிலத்தில் இருந்து 15 தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், 5 தோட்டக்கலை உயர் அதிகாரிகள், தமிழகத்தில் செயல்படுத்தி வரும் துல்லியப் பண்ணைத் திட்டம், நுண்ணீர் பாசனத் திட்டங்கள் உள்ளிட்டவற்றை நேரில் பார்வையிட ஒசூர் வந்தனர்.
அவர்கள் ஒசூர், பூனப்பள்ளி, அச்செட்டிப்பள்ளி, உள்ளிட்ட கிராமங்களில் சாமந்தி, ரோஜா உள்ளிட்ட மலர் சாகுபடி மற்றும் காய்கறி சாகுபடிகளை நேரில் பார்வையிட்டனர்.
ஒசூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் காளியப்பன் குழுவினருக்கு விளக்கமளித்தார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 79.62 அடி**

First Published : 11 Jun 2010 11:50:20 AM IST

சேலம், ஜூன் 10: மேட்டூர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 79.62 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 7,839 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,439 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணை நீர் இருப்பு 41.57 டி.எம்.சி.

**தீவிர துவரை சாகுபடி இயக்கம் தொடக்கம்**

First Published : 11 Jun 2010 11:11:21 AM IST

புதுக்கோட்டை, ஜூன் 10: புதுக்கோட்டை மாவட்டத்தில் பயறு இயக்கம் மூலம் துவரை சாகுபடியை தீவிரப்படுத்தும் இயக்கத்தைத் தொடங்கியுள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ஆ. சுகந்தி வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மாவட்டத்தில் கடந்தாண்டுகளில் துவரை சாகுபடி பரப்பு மிகவும் குறைவாக இருந்தது. காரீப் பருவத்தில் மானாவாரி நிலக்கடலைச் சாகுபடியில் ஊடுபயிராக துவரை சாகுபடி நடைபெறும் நிலையில், இயல்பான துவரை சாகுபடி பரப்பு 7,460 ஹெக்டேரிலிருந்து 107 ஹெக்டேராக கடந்தாண்டு குறைந்துள்ளது.

தமிழக அரசின் விவசாயக் கொள்கையில் பயறு வகை பயிர்கள் சாகுபடிக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளதால்., புதுக்கோட்டை மாவட்டத்தில் நிகழாண்டில் துவரை சாகுபடியை மீண்டும் அதிகப் பரப்பளவில் மேற்கொள்ள, விவசாயிகளை வலியுறுத்தும் நோக்கில் இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் துவரை சாகுபடி மேற்கொள்ள உதவும் வகையில், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 10 வட்டாரங்களில் 163 ஹெக்டேரில் துவரையை தனிப்பயிராக சாகுபடி செய்ய, செயல் விளக்கம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதவிர நீர்வள, நிலவளத் திட்டத்தின் மூலம் உப வடிநிலப் பகுதிகளில் 100 ஹெக்டேரிலும் மேலும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (பயறு) மூலம் 20 ஹெக்டேரிலும் துவரையைத் தனிப்பயிராகச் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

காரீப் பருவத்தில் 283 ஹெக்டேர், ராபிப் பருவத்தில் 500 ஹெக்டேர் என மொத்தம் 783 ஹெக்டேரில் நிகழாண்டில் தனிப்பயிராக துவரை சாகுபடி மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

துவரை சாகுபடி ஆர்வலர் குழுக்கள் மற்றும் முன்னோடி விவசாயிகள் மூலம் துவரை சாகுபடி மேற்கொள்ள வலியுறுத்தப்படும்.

வழங்கப்படும் இடுபொருள்கள்: ஒரு ஹெக்டேரில் துவரையை தனிப்பயிராக சாகுபடி செய்ய முன்வரும் விவசாயிகளுக்கு, சான்று பெற்ற துவரை விதை 20 கிலோ, ஜிப்சம் -110 கிலோ, பயறு நுண்சத்து 5 கிலோ, பயிர் உரங்கள்- 6, டிஏபி-109 கிலோ, யூரியா- 11 கிலோ, மியுரேட் ஆப் பொட்டாஷ்- 42 கிலோ, இலைவழி உரம் டிஏபி-25 கிலோ மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், களைக்கொல்லி மருந்துகள் உள்ளிட்ட இடுபொருள்கள் ரூ. 5,000 மானியத்தில் அளிக்கப்படும்.

சாகுபடி தொழில்நுட்பங்கள்: விதை நேர்த்தி செய்யப்பட்டு, ஊற வைத்த விதைகளை வரிசையாக விதைப்பு செய்ய வேண்டும். பயறு நுண்சத்து, உர மேலாண்மை, இலைவழி மூலம் டிஏபி கரைசல் தெளித்தல், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மற்றும் அறுவடைக்குப் பின்சார்ந்த தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றைக் கடைப்பிடித்து, விவசாயிகள் தனிப்பயிராக துவரையைச் சாகுபடி செய்து, தற்போது நீடிக்கும் புரதச்சத்துப் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார் ஆட்சியர்.

## மேட்டூர் அணை திறப்பு இப்போது இல்லை? குறுவை சாகுபடி பாதிக்கும் அபாயம்

First Published : 12 Jun 2010 12:58:16 AM IST

சென்னை, ஜூன் 11: மேட்டூர் அணை திறப்பு இப்போதைக்கு இல்லை என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால், குறுவை சாகுபடி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேட்டூர் அணையின் மொத்த நீர் மட்ட அளவு 120 அடியாகும். வெள்ளிக்கிழமை நிலவரப்படி, அணையின் நீர் மட்ட அளவு 79.83 அடியாக உள்ளது. கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் 60.16 அடியாக இருந்தது.

குறுவை சாகுபடிக்காக, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம். அணையில் நீர்மட்டத்தின் அளவு 90 அடியை எட்டும்போது தண்ணீர் திறக்கப்படும். ஆனால், இப்போதைய நிலவரப்படி வெறும் 79 அடி மட்டுமே தண்ணீர் இருப்பதால் அணையில் இருந்து தண்ணீரைத் திறக்க வாய்ப்பில்லை என்று பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து, அவர்கள் மேலும் கூறியது:

கர்நாடக மாநில அணைகளில் தண்ணீர் நிரம்பி வழியும்போது, அங்கிருந்து வெளியேறும் நீர் மேட்டூருக்கு வரும். ஆனால், கர்நாடகத்தில் உள்ள அணைகளில் 21 சதவீத அளவுக்கு மட்டுமே நீர் தேங்கியிருப்பதாக அந்த மாநில அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். எனவே, அங்கிருந்து தண்ணீர் வருவதற்கு சாத்தியமில்லை.

அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும் தேதியை இப்போதைக்கு அறிவிக்க இயலாது. மழை அளவின் நிலவரம், அணையில் நீர் தேக்கத்தின் நிலையைப் பொறுத்தே நீர் திறக்கப்படும் தேதி அறிவிக்கப்படும் என்றனர்.

குறுவை சாகுபடியும் இல்லை: கடந்த ஆண்டு ஜூன் 11-ம் தேதிவாக்கில், மேட்டூர் அணையின் நீர் மட்டம் 60 அடியாக மட்டுமே இருந்தது. இதனால், அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவது தாமதம் ஆனது. இதன் எதிரொலியாக குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டது.

இந்த ஆண்டும் மேட்டூர் அணையைத் திறப்பது குறித்து 15 நாள்களுக்குப் பிறகே முடிவு செய்யப்படும் என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால், நிகழாண்டிலும் குறுவை சாகுபடி இருக்காது என விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

பம்ப் செட் போன்ற முறைகள் மூலம் குறுவை சாகுபடி நடைபெற்றாலும் அவற்றின் அளவு மிகக் குறைவு என்றும், தண்ணீர் திறந்து விட்டால் மட்டுமே விவசாயம் செய்திட முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## தினமலர்

**பால்வேன்பயணநேரத்தைநீடிக்கலஞ்சம் :பால்உற்பத்தியாளர்கூட்டுறவுசங்கதனிஅலுவலர்கைது**

திருச்சி: திருச்சியில்பால்ஏற்றிச்செல்லும்வேனில்பயணநேரத்தைஅதிகரிக்கஅனுமதிவழங்க 2,000 ரூபாய்லஞ்சம்வாங்கிய, பால்உற்பத்தியாளர்கூட்டுறவுசங்கத்தின்தனிஅலுவலர்லஞ்சஒழிப்புபோலீஸாரால்கைதுசெய்யப்பட்டார்.

திருச்சிபுத்தூர்பகுதியைச்சேர்ந்தவர்சரவணன் (28).இவர்ஆவின்பால்நிறுவனத்துக்குலால்குடி, புள்ளம்பாடிஆகியசுற்றுப்பகுதியில்பால்உற்பத்தியாளர்களிடமிருந்துபாலைவேனில்ஏற்றிவந்துதிருச்சியில்உள்ளஆவின்தலைமைஅலுவலகத்தில்ஒப்படைக்கும்ஒப்பந்தத்தைஇரண்டுஆண்டுக்குபெற்றுள்ளார். லால்குடிபகுதியில்உள்ள 18 கிராமங்களில்பாலைவேனில்ஏற்றிவரும்சரவணனால்குறிப்பிட்டநேரத்தில்பாலைகொண்டுவந்து ஆவின்தலைமைஅலுவலகத்தில்சேர்க்கமுடியவில்லை. ஏனென்றால், அவர்பால்எடுக்கும்செல்லும்பகுதிகளில்ரோடுகள்மிகவும்மோசமாகஇருந்துள்ளது.இதனால்பால்ஏற்றிவரும்நேரத்தைஅதிகரித்துதருமாறுபுள்ளம்பாடியில்உள்ளபால்உற்பத்தியாளர்கள்கூட்டுறவுசங்கத்தின்தனிஅலுவலர்ஆனந்தனிடம் (51) கேட்டுள்ளார்.அதற்குஅவர், "நேரத்தைநீடிக்கபரிந்துரைசெய்யவேண்டும்என்றால் 2,000 ரூபாய்லஞ்சம்கொடுக்கவேண்டும்' என்றுகேட்டுள்ளார்.

இதனால்ஆத்திரமடைந்தசரவணன்திருச்சிலஞ்சஒழிப்புடி.எஸ்.பி., அம்பிகாபதியிடம்நேற்றுமுன்தினம்புகார்செய்தார்.ஆனந்தனைபொறிவைத்துபிடிக்கதிட்டம்தீட்டப்பட்டது.சரவணன்வேன்பயணநேரத்தைநீடிக்கபரிந்துரைசெய்ய 2,000 ரூபாய்தருகிறேன்என்றுகூறியுள்ளார்.அதைக் கேட்டதனி அலுவலர்ஆனந்தன், "நான்ஆவின்தலைமைஅலுவலம்வருகிறேன்.அங்குவந்துபணத்தைபெற்றுக்கொள்கிறேன்' என்றுகூறியுள்ளார்.அதன்படி, நேற்றுமதியம் 12 மணியளவில்ஆவின்தலைமைஅலுவலகஅறையில்இருந்ததனிஅலுவலர்ஆனந்தனிடம்இரண்டாயிரம்ரூபாயைசரவணன்கொடுத்துள்ளார்.அதைவாங்கிஆனந்தன்பாக்கெட்டில்வைத்துள்ளார்.அப்போதுஅங்குமறைந்திருந்தலஞ்சஒழிப்புபோலீஸார்ஆனந்தனைகையும், களவுமாகபிடித்து, அவரிடம்இருந்தலஞ்சப்பணம்இரண்டாயிரத்தைபறிமுதல்செய்தனர்.தனிஅலுவலர்ஆனந்தன்கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தில்ஆஜர்படுத்தப்பட்டுதிருச்சிமத்தியசிறையில்அடைக்கப்பட்டார்.

**ஒருதேங்காயைவிடஒருதக்காளிவிலைஅதிகம்**

ஈரோடு: தக்காளியின்விலைநாளுக்குநாள்உயர்ந்துவரும்நிலையில், ஒருதேங்காயின்சராசரிவிலையைவிட, ஒருதக்காளியின்விலைஉயர்ந்துள்ளது. சமையலுக்குதேவையானகாய்கறிகளில்முக்கியஇடம்பெறும்தக்காளிவிலைபடிப்படியாகஅதிகரித்துகொண்டேஇருக்கிறது.ஈரோடுநேதாஜிமார்க்கெட்டில்கடந்தவாரம்தக்காளிகிலோ 30 ரூபாய்க்குவிற்பனையானது.சில்லரைவிலையில் 32 ரூபாய்க்குவிற்பனைசெய்யப்பட்டது.ஊட்டி, மேட்டுப்பாளையம்மற்றும்பிறமாவட்டங்களில்இருந்துதக்காளிவரத்துகுறைவாகஇருக்கிறது.தக்காளிதேவைஅதிகரித்திருக்கும்போது, உற்பத்திகுறைவாகஇருப்பதேவிலைஉயர்வுக்குகாரணமாகஅமைகிறது.சென்றவாரத்தைகாட்டிலும்நாட்டுத்தக்காளிவிலைஉயர்ந்துஒருகிலோ 38 ரூபாய்க்கும், கலப்பினதக்காளி 28 ரூபாய்க்கும்விற்கப்பட்டது.ஒருவாரத்தில்பத்துரூபாய்கூடிப்போனதால், பொதுமக்கள்பெரும்அதிர்ச்சியடைந்தனர்.சமையலுக்குதேவையானதுவரம்பருப்புவரலாறுகாணாதவிலையைஓராண்டுக்குமுன்தொட்டது.ஏழை, நடுத்தரமக்களுக்குபருப்புசாம்பார்வெறும்கனவாகமாறிப்போனது.தற்போதுதக்காளிவிலைஏற்றத்தால்ஏழை, நடுத்தரமக்களுக்குதக்காளிஎதிரியாகிவிட்டது."தக்காளியின்ஏறுமுகவிலைஇதோடுநிற்காமல், அடுத்தவாரத்திலிருந்துஇன்னும்அதிகரிக்கும்' என, வியாபாரிகள்கூறுகின்றனர்.

இப்போதேதக்காளிவிற்கும்கடைகள்வெறிச்சோடிகாணப்படுகின்றன.அடுத்தவாரம்விலைஅதிகரித்தால்மார்க்கெட்டில்தக்காளிவிற்கும்வியாபாரிகள்எண்ணிக்கையும்கணிசமாககுறைந்துவிடும்.அந்தியூர்ஒழுங்குமுறைவிற்பனைக்கூடத்துக்கு 20 ஆயிரம்தேங்காய்வரத்தானது.சிறியதேங்காய்ஒன்று

1.30 ரூபாய்க்கும், பெரியதேங்காய் 5.20 ரூபாய்க்குஏலம்போனது.இந்தவிலைவிபரப்படிதேங்காய்விலையுடன், தக்காளிவிலையைஒப்பிட்டால், தக்காளிவிலைஅதிகமாகிறது.ஒருகிலோநாட்டுத்தக்காளியில் 14 பழங்கள்இருக்கும்.கலப்பினதக்காளி 16 எண்ணம்இருக்கும்.இதன்படி, ஒருநாட்டுதக்காளிபழத்தின்விலை 2.37 ரூபாய், ஒருகலப்பினதக்காளிபழத்தின்விலை 1.64 ரூபாய்க்குவிற்கப்படுகிறது.ஒருசிறியதேங்காய் 1.30 ரூபாய்க்குமட்டுமேவிலைபோகிறது.இப்படிபார்த்தால்ஒருதேங்காயைவிடஒருதக்காளிபழம்விலை அதிகரித்திருப்பதுகுறிப்பிடத்தக்கது.

**விவசாயஉபகரணம்வழங்கல்**

பழநி: வனத்துறைசார்பில்மலைவாழ்பழங்குடிமக்களுக்குவிவசாயஉபகரணங்கள்வழங்கப்பட்டது. குதிரையாறு, மண்திட்டு, பொந்துப்புளிஆகியபகுதியைசேர்ந்தவர்களுக்குரூ.3 லட்சம்மதிப்பிலானபொருட்கள்வழங்கப்பட்டன.அன்பழகன்எம்.எல்.ஏ.,தலைமைவகித்தார். ரேஞ்சர்தர்மராஜ்முன்னிலைவகித்தனர்.வனஊழியர்கள், மலைவாழ்மக்கள்பலர்பங்கேற்றனர்.

**விவசாயபயிர்களுக்குநிவாரணம்இல்லை !**

மதுரை: வறட்சி, வெள்ளத்தில்பாதிப்புபோன்றஇயற்கைசீற்றங்களால்விவசாயப்பயிர்களுக்குபாதிப்புஏற்படும்போது, அரசுநிவாரணம்இனிமேல்வழங்காது. அனைத்துபயிர்களுக்குகாப்பீடுசெய்ய, அரசுமானியம்தருகிறது.அதுதவிரகுறைந்தளவுபிரீமியம்செலுத்தினால்போதும்.பயிர்க்காப்பீடுசெய்தால், இழப்புஏற்படும்போதுபயிருக்குரியதொகையைஇன்சூரன்ஸ்நிறுவனம்வழங்கும்.எனவேஅரசின்சார்பில்தனியாகஇழப்பீடுவழங்கப்படாதுஎன, வேளாண்துறைதெரிவித்துள்ளது.

**துவரைசெயல்விளக்கதிடல்வேளாண்மைஇணைஇயக்குநர்ஆய்வு**

தென்காசி :தென்காசிவட்டாரத்தில்துவரைசெயல்விளக்கதிடலில்வேளாண்மைஇணைஇயக்குநர்ஆய்வுசெய்தார்.

பயறுவகைபயிர்களின்பரப்பைஅதிலும்குறிப்பாகதுவரையின்பரப்பைஅதிகரிக்கவும், பாசனவசதியுள்ளவிளைநிலங்களில்பயறுவகைகள்சாகுபடிசெய்வதைஊக்குவிக்கவும், தெளிப்புநீர்பாசனமுறையில்பயறுவகைகள்சாகுபடிசெய்வதைபிரபலப்படுத்திபயறுவகைகளின்உ

ற்பத்தியைஅதிகரிக்கும்நோக்குடன்தேசியவேளாண்அபிவிருத்திதிட்டத்தின்கீழ்துவரைசெயல்விளக்கதிடல்கள்தென்காசிவட்டாரபகுதியில்அமைக்கப்பட்டுள்ளன.

தென்காசிமுகம்மதுஅமானுல்லாஎன்றவிவசாயிஅமைத்துள்ளதுவரைசெயல்விளக்கதிடலைமாவட்டவேளாண்மைஇணைஇயக்குநர்சுப்பிரமணியன்பார்வையிட்டுஆய்வுசெய்தார்.ஒருங்கிணைந்தஉரநிர்வாகம், 2
சதடி.ஏ.பி.கரைசல்தெளித்தல்மற்றும்ஒருங்கிணைந்தபூச்சிநோய்நிர்வாகம்போன்றஉயரியதொழில்நுட்பங்களைவிவசாயிகளிடையேபிரபலப்படுத்திபயறுவகைகளின்உற்பத்தியைபெருக்கிடுமாறுகளப்பணியாளர்களைவேளாண்மைஇணைஇயக்குநர்அறிவுறுத்தினார்.

இதேபகுதியில்அமைக்கப்பட்டுள்ளஉளுந்துவிதைபண்ணையையும்வேளாண்மைஇணைஇயக்குநர்பார்வையிட்டுஆய்வுசெய்தார்.ஆய்வின்போதுவேளாண்மைதுணைஇயக்குநர்
(மத்தியதிட்டங்கள்) தேவசகாயம், துணைவேளாண்மைஅலுவலர்லட்சுமிநாராயணன்,
உதவிவிதைஅலுவலர்பாலசுப்பிரமணியன், வேளண்மைஉதவிஅலுவலர்கள்பரமசிவம்,
அன்சர்அலிஉடனிருந்தனர்.

**மாம்பழத்துறையாறுஅணைதிட்டம் :அமைச்சர், அதிகாரிகள்ஆய்வு**

வில்லுக்குறி:
மாம்பழத்துறையாறுஅணைத்திட்டம்இன்னும்ஒன்றுமுதல்ஒன்றரைமாதத்தில்நிறைவடையும்எனஅமைச்சர்சுரேஷ்ராஜன்தெரிவித்தார்.குமரிமாவட்டத்தில்வில்லுக்குறிஅருகேகட்டப்பட்டுவரும்மாம்பழத்துறையாறுஅணைத்திட்டம்மக்கள்மத்தியில்பெரும்எதிர்பார்ப்பைஏற்படுத்தியுள்ளது.
குறிப்பாகவிவசாயிகள்மத்தியில்மகிழ்ச்சியைஏற்படுத்தியுள்ளது.இந்தஅணைசுற்றுலாபயணிகளையும்கவர்ந்துள்ளது.அணை,
விவசாயிகளின்பயன்பாட்டிற்குவரும்நாளைஎதிர்பார்த்துகுமரிமக்கள்காத்திருக்கின்றனர்.அணையில்தற்போதுஇறுதிகட்டபணிகள்நடந்துவருகிறது.இந்தஅணையின்கொள்ளளவு 44.54
மில்லியன்கனஅடிஆகும்.உயரம் 75 அடியும், நீளம் 360
மீட்டரும்கொண்டதாககட்டப்பட்டுவருகிறது.இதில்மண்அணைஅமைக்கும்பணிகடந்த
2007ம்ஆண்டுமேமாதம்துவங்கிநடந்துவருகிறது.

உபரிநீர்வழிந்தோடிஅமைக்கும்பணிகடந்த2009ம்ஆண்டுஅக்டோபர்மாதம்துவங்கிநடந்துவருகிறது.இந்நிலையில்அணையின்கட்டுமானபணிகளைநேரில்பார்வையிட்டுஆய்வுசெய்யதமிழகசுற்றுலாமற்றும்பத்திரபதிவுத்துறைஅமைச்சர்சுரேஷ்ராஜன்,மாவட்டகலெக்டர்ராஜேந்திரரத்னுஅணைப்பகுதிக்குவந்தனர்.அணையின்மேல்பகுதிக்குஅதிகாரிகளுடன்சென்றுபார்வையிட்டு
ஆலோசனைநடத்தினர்.

பின்நிருபர்களிடம்அமைச்சர்சுரேஷ்ராஜன்கூறியதாவது:மாம்பழத்துறையாறுஅணைத்திட்டம் 20.98 கோடிரூபாய்செலவில்கட்டப்பட்டுவருகிறது.
இதுகுமரிமாவட்டமக்களின்நீண்டநாள்கோரிக்கையாகும்.இந்தஆணைத்திட்டம்இன்னும்ஒன்றுமுதல்ஒன்றரைமாதத்தில்முடிவடையும்.இதன்கொள்ளளவு44.54மில்லியன்கனஅடிஆகும்.இந்தஅணைமூலம் 905.76 ஏக்கர்நிலப்பரப்புபயனடையும்.
2001ம்ஆண்டுதி.மு.க.,ஆட்சியின்போதுசட்டசபையில்அரசாணைவெளியிடப்பட்டுநிதியும்ஒதுக்கப்பட்டது. அதன்பின்ஆட்சிமாற்றத்தின்காரணமாககிடப்பில்போடப்பட்டது.மீண்டும் 5வதுமுறையாகஆட்சிக்குகருணாநிதிவந்தஉடன்இதன்பணிகள்துவங்கிநடந்துவருகிறது.

காலம்கடந்ததால்5கோடிரூபாய்வரைஅரசிற்குஅதிகம்செலவாகியுள்ளது.இவ்வாறுஅமைச்சர்சுரேஷ்ராஜன்கூறினார்.
இந்தஆய்வின்போதுநீர்வளஆதாரஅமைப்புதிட்டங்கள்இன்ஜினியர்சங்கர், உதவிஇன்ஜினியர்கள்இனோக், திருநாவுக்கரசுஉட்படஅதிகாரிகள்உடனிருந்தனர்.

**குடிமங்கலம்பகுதியில் வறட்சியால் தென்னைமரங்கள்காயும் பரிதாபம்**

உடுமலை :பருவமழைதாமதித்துவருவதால்குடிமங்கலம்பகுதியில்வறட்சிஅதிகரித்து, போதியதண்ணீர்கிடைக்காமல்தென்னைமரங்கள்காயும்நிலைஏற்பட்டுள்ளது. காய்கறிசாகுபடிமுற்றிலுமாககுறைந்துள்ளது.

குடிமங்கலம்பகுதியில்பிரதானமாகஉள்ளவிவசாயசாகுபடிக்குதென்மேற்குபருவமழைஉதவுகிறது. ஆண்டுதோறும்மேமாதஇறுதியில்துவங்கும்இந்தமழையால்குளங்கள், தடுப்பணைகள்மற்றும்கிணறுகளுக்குநீர்வரத்துகிடைக்கும்.தொடர்ந்து, பி.ஏ.பி., மண்டலபாசனங்களில்பல்வேறுவாய்க்கால்களில்செல்லும்தண்ணீர்நிலத்தடிநீருக்குஉதவியாகஇருந்தது. இந்தாண்டுகோடைவெயில்முன்னதாகவேபிப்., மாதத்தில்துவங்கியது.கடுமையானவெயில்கொளுத்தியநிலையில்வடகிழக்கு பருவமழையைவிவசாயிகள்எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால், மேமாதம்துவங்கும்வரை 25 மி.மீ., மழைகூடஇப்பகுதியில்பெய்யவில்லை.பி.ஏ.பி., முதலாம்மண்டலபாசனத்திலும்காண்டூர்கால்வாய்உடைப்புபோன்றகாரணங்களால்பலசுற்றுதண்ணீர்இப்பகுதிக்குகிடைக்கவில்லை.இதனால், நிலத்தடிநீர்மட்டம்வேகமாகசரிந்துகுளங்கள், தடுப்பணைகளில்முற்றிலுமாகதண்ணீர்வறண்டது.கிணறுகளில்நீர்மட்டம்வெகுவாககுறைந்தது.நிலைப்பயிர்களுக்குதண்ணீர்கிடைக்காதநிலையில்விவசாயிகள்புதிதாகபோர்வெல்அமைத்தனர்.மே

மாதஇறுதியில்தென்மேற்குபருவமழைதுவங்கும்எனவிவசாயிகள்எதிர்பார்த்திருந்தனர். ஆனால், பருவமழைகுறித்தநேரத்தில்துவங்காமல்தாமதித்துவருகிறது.கடந்தசிலநாட்களாககுளிர்காற்றுமட்டும்தீவிரமடைந்துள்ளது.போதியதண்ணீர்கிடைக்காமல்தென்னைமரங்கள்கடுமையாகபாதிக்கப்பட்டுள்ளது.அதிகவறட்சியால்கிணறுகளில்தண்ணீர்முற்றிலுமாகவற்றும்நிலைஏற்பட்டுள்ளது.வழக்கமாகபருவமழையைஎதிர்பார்த்துஇப்பகுதியில்மேமாதஇறுதியில்பலஆயிரம்ஏக்கரில்சின்னவெங்காயம்சாகுபடிசெய்யப்படும்.

இந்தாண்டுஜூன்மாதம்துவங்கியும்சாகுபடிபணிகளுக்கானமுதற்கட்டபணிகள்கூடமேற்கொள்ளப்படவில்லை.பிறகாய்கறிபயிர்களானதக்காளி, கத்தரி, வெண்டை, பீட்ரூட்பயிரிடப்படவில்லை. இதுகுறித்துவிவசாயிகள்கூறுகையில்,

தென்மேற்குபருவமழைதாமதித்துவருவதால்தென்னைமரங்கள்காயும்நிலைஏற்பட்டுள்ளது.பிறநிலைப்பயிர்களையும்காப்பற்றபி.ஏ.பி., பாசனத்தில்உயிர்தண்ணீர்வழங்கவேண்டும்' என்றனர்.

**பச்சைபட்டாணியில்சாயம்சேர்த்துவிற்பனைசுகாதாரத்துறை "எச்சரிக்கை'**

திருப்பூர் :பச்சைபட்டாணியைமெருகூட்டுவதற்காக, சாயம்சேர்த்துவிற்கப்படுகிறது. சாயம்கலந்தஅந்தஉணவுபொருளைசாப்பிட்டால்,உடல்உபாதைஏற்படும்.இப்பொருட்கள்விற்பனையைதவிர்க்க,மாநகராட்சியும்,சுகாதாரத்துறையும்இணைந்துநடவடிக்கைஎடுக்கவேண்டும்.மாநிலம்முழுவதும்மேற்கொள்ளப்பட்டஉணவுகலப்படதடுப்புஆய்வுநடவடிக்கையின்தொடர்ச்சியாக, திருப்பூரிலும்ஒருவாரம்ஆங்காங்கேஆய்வுசெய்யப்பட்டது.அவைமேலோட்டமாகஅமைந்துவிட்டதால்,தரமற்றஉணவுபொருட்களின்விற்பனை,நகரில்பலஇடங்களில்இன்றும்தொடர்கிறது.குறிப்பாக,பள்ளிகுழந்தைகள்சாப்பிடும்தின்பண்டங்கள்,தரமற்றுஇருப்பதுபெற்றோர்மத்தியில்அதிர்ச்சியைஏற்படுத்தியுள்ளது.

சிறுவர்களின்மனதைகவரும்வகையில்சாயப்பொடியைஅதிகமாகபயன்படுத்தி, தின்பண்டங்கள்தயார்செய்யப்படுகின்றன.அதிகளவிலானகலர்சேர்த்துவிற்கும்பொருட்களில்பச்சைபட்டாணியும்ஒன்று.ஆர்வத்துடன்குழந்தைகள்சாப்பிடும்போது,அதிலுள்ளகலர்உடல்நலத்தைபாதிக்கிறது;வயிற்றுவலி,வாந்திஉள்ளிட்டபிரச்னைகளைஉருவாக்குகிறது.பெட்டிக்கடைமுதல்பெரியகடைவரை,ஒருரூபாயில்இருந்துபல்வேறுவிலைகளில்பாக்கெட்டுகளாகவிற்பனைசெய்கின்றன. சிறியவர்கள்முதல்பெரியவர்வரைபட்டாணியைவிரும்பிசாப்பிடுவர்.பள்ளிகள், "டாஸ்மாக்' மதுக்கடைகளின்அருகில்பட்டாணிவிற்பனைஅமர்க்களாகஉள்ளது.மழைகாலம்துவங்கியுள்ளதால் ,குளிருக்குபட்டாணிவிற்பனையும்அதிகரிக்கவாய்ப்புள்ளது.பள்ளிகளில்சாப்பிடுவதற்குநொறுக்கு

தீனியாகபட்டாணியைவாங்கிக்கொடுக்கின்றனர்.குழந்தைகளுக்குவாங்கிகொடுக்கும்உணவுபொருட்கள்குறித்துபெற்றோர்உரியகவனம்செலுத்தவேண்டும்.

சமீபத்தில்காலாவதியானஉணவுபொருட்கள்விற்பனைகுறித்துஆய்வுசெய்யப்பட்டகடைகளிலும், தரமற்றபட்டாணிவிற்பனைநடக்கிறது.பட்டாணிஉள்ளிட்டஉணவுபண்டங்களை, கடைக்காரர்கள்,வீடுகளில்சொந்தமாகதயார்செய்து,சில்லரைவிற்பனைநிலையங்களுக்குவிற்கின்றனர்.திருப்பூரில்விற்கப்படும்பொருட்கள்தயாரிக்கும்இடம்,விற்பனைசெய்யும்முறைகளையும்சேகரிக்கவேண்டும்.லோக்கலில்உள்ளதயாரிப்புஇடங்களைநேரில்ஆய்வுசெய்து,தரமற்றஉணவுபொருட்களின்விற்பனையைதடுக்கவேண்டும்.சுகாதாரத்துறைமட்டுமின்றிமாவட்டநிர்வாகம், உள்ளாட்சிஅமைப்புகள்முன்வந்து,தொடர்ந்துஆய்வுமேற்கொள்வதுஅவசியம்.சுகாதாரபணிகள்துணைஇயக்குனர்விஜயலட்சுமியிடம்கேட்டபோது,இயற்கையானமுறையில்தயாரிக்கப்படும்உணவுபொருட்களுக்குகலர்சேர்க்கக்கூடாது.செயற்கையாகதயாரிக்கப்படும்உணவுபொருட்களுக்குகுறிப்பிட்டஅளவேகலர்சேர்க்கலாம்.அதிகளவில்மற்றும்முறையற்றுகலர்சேர்த்துவிற்பனைசெய்வோர்மீதுஉரியநடவடிக்கைஎடுக்கப்படும்," என்றுஎச்சரித்தார்.

**கால்நடைநோய்தடுப்புவிழிப்புணர்வுமுகாம்**

தர்மபுரி: தர்மபுரிமாவட்டத்தில்கால்நடைபராமரிப்புதுறைமூலம் "அஸ்காட்' திட்டத்தின்கீழ்கால்நடைநோய்தடுப்புவிழிப்புணர்வுமுகாம்வட்டாரஅளவில்இன்று (ஜூன் 12) முதல் 29ம்தேதிவரைநடக்கிறது.

அரூர்தாலுகாவில்வாசாத்தியில்வரும் 12ம்தேதியும், வரும் 16ம்தேதிபாப்பிரெட்டிப்பட்டி, மொரப்பூரிலும், 19ல்பென்னாகரத்திலும், 22ல்தர்மபுரியிலும், 23ல்தேதிநல்லம்பள்ளியிலும், 24ல்காரிமங்கலத்திலும், 25ம்தேதிபாலக்கோட்டிலும், மாவட்டஅளவில் 29ம்தேதிதர்மபுரியில்நடக்கிறது. முகாமில், கால்நடைகளுக்குஏற்படும்தொற்றுநோய்கள்குறித்தும், நோயகளில்இருந்துகால்நடைகளைபாதுகாப்பதுகுறித்தும்கால்நடைமருத்துவர்கள்மூலம்விளக்கப்படுகிறது.

**பால்வேன்பயணநேரத்தைநீடிக்கலஞ்சம் :பால்உற்பத்தியாளர்கூட்டுறவுசங்கதனிஅலுவலர்கைது**

திருச்சி: திருச்சியில்பால் ஏற்றிச்செல்லும் வேனில்பயண நேரத்தை அதிகரிக்க அனுமதிவழங்க 2,000ரூபாய்லஞ்சம்வாங்கிய,பால்உற்பத்தியாளர்கூட்டுறவுசங்கத்தின்தனிஅலுவலர்லஞ்சஒழிப்பு போலீஸாரால்கைது செய்யப்பட்டார்.

திருச்சிபுத்தூர்பகுதியைச்சேர்ந்தவர்சரவணன் (28).இவர்ஆவின்பால்நிறுவனத்துக்குலால்குடி, புள்ளம்பாடிஆகியசுற்றுப்பகுதியில்பால்உற்பத்தியாளர்களிடமிருந்துபாலைவேனில்ஏற்றிவந்துதிருச்சியில் உள்ள ஆவின்தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்கும்ஒப்பந்தத்தைஇரண்டுஆண்டுக்கு பெற்றுள்ளார். லால்குடிபகுதியில்உள்ள 18 கிராமங்களில்பாலைவேனில்ஏற்றிவரும்சரவணனால்குறிப்பிட்டநேரத்தில்பாலைகொண்டுவந்து ஆவின்தலைமைஅலுவலகத்தில்சேர்க்கமுடியவில்லை. ஏனென்றால், அவர்பால்எடுக்கும்செல்லும்பகுதிகளில்ரோடுகள்மிகவும்மோசமாகஇருந்துள்ளது.இதனால்பால்ஏற்றிவரும்நேரத்தைஅதிகரித்துதருமாறுபுள்ளம்பாடியில்உள்ளபால்உற்பத்தியாளர்கள்கூட்டுறவுசங்கத்தின்தனிஅலுவலர்ஆனந்தனிடம் (51) கேட்டுள்ளார்.அதற்குஅவர், "நேரத்தைநீடிக்கபரிந்துரைசெய்யவேண்டும்என்றால் 2,000 ரூபாய்லஞ்சம்கொடுக்கவேண்டும்' என்றுகேட்டுள்ளார்.

இதனால்ஆத்திரமடைந்தசரவணன்திருச்சிலஞ்சஒழிப்புடி.எஸ்.பி., அம்பிகாபதியிடம்நேற்றுமுன்தினம்புகார்செய்தார்.ஆனந்தனைபொறிவைத்துபிடிக்கதிட்டம்தீட்டப்பட்டது.சரவணன்வேன்பயணநேரத்தைநீடிக்கபரிந்துரைசெய்ய 2,000 ரூபாய்தருகிறேன்என்றுகூறியுள்ளார்.அதைக்கேட்டதனிஅலுவலர்ஆனந்தன், "நான்ஆவின்தலைமைஅலுவலம்வருகிறேன்.அங்குவந்துபணத்தைபெற்றுக்கொள்கிறேன்' என்றுகூறியுள்ளார்.அதன்படி, நேற்றுமதியம் 12 மணியளவில்ஆவின்தலைமைஅலுவலகஅறையில்இருந்ததனிஅலுவலர்ஆனந்தனிடம்இரண்டாயிரம்ரூபாயைசரவணன்கொடுத்துள்ளார்.அதைவாங்கிஆனந்தன்பாக்கெட்டில்வைத்துள்ளார்.அப்போதுஅங்குமறைந்திருந்தலஞ்சஒழிப்புபோலீஸார்ஆனந்தனைகையும், களவுமாகபிடித்து, அவரிடம்இருந்தலஞ்சப்பணம்இரண்டாயிரத்தைபறிமுதல்செய்தனர்.தனிஅலுவலர்ஆனந்தன்கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தில்ஆஜர்படுத்தப்பட்டுதிருச்சிமத்தியசிறையில்அடைக்கப்பட்டார்.

### 3.ஒருதேங்காயைவிடஒருதக்காளிவிலைஅதிகம்

ஈரோடு: தக்காளியின்விலைநாளுக்குநாள்உயர்ந்துவரும்நிலையில், ஒருதேங்காயின்சராசரிவிலையைவிட, ஒருதக்காளியின்விலைஉயர்ந்துள்ளது. சமையலுக்குதேவையானகாய்கறிகளில்முக்கியஇடம்பெறும்தக்காளிவிலைபடிப்படியாகஅதிகரித்துகொண்டேஇருக்கிறது.ஈரோடுநேதாஜிமார்க்கெட்டில்கடந்தவாரம்தக்காளிகிலோ 30 ரூபாய்க்குவிற்பனையானது.சில்லரைவிலையில் 32 ரூபாய்க்குவிற்பனைசெய்யப்பட்டது.ஊட்டி, மேட்டுப்பாளையம்மற்றும்பிறமாவட்டங்களில்இருந்துதக்காளிவரத்துகுறைவாகஇருக்கிறது.தக்காளிதேவைஅதிகரித்திருக்கும்போது, உற்பத்திகுறைவாகஇருப்பதேவிலைஉயர்வுக்குகாரணமாகஅமைகிறது.சென்றவாரத்தைகாட்டிலு

ம்நாட்டுத்தக்காளிவிலைஉயர்ந்துஒருகிலோ 38 ரூபாய்க்கும், கலப்பினதக்காளி 28 ரூபாய்க்கும்விற்கப்பட்டது.ஒருவாரத்தில்பத்துரூபாய்கூடிப்போனதால், பொதுமக்கள்பெரும்அதிர்ச்சியடைந்தனர்.சமையலுக்குதேவையானதுவரம்பருப்புவரலாறுகாணாதவிலையைஓராண்டுக்குமுன்தொட்டது.ஏழை, நடுத்தரமக்களுக்குபருப்புசாம்பார்வெறும்கனவாகமாறிப்போனது.தற்போதுதக்காளிவிலைஏற்றத்தால்ஏழை, நடுத்தரமக்களுக்குதக்காளிஎதிரியாகிவிட்டது."தக்காளியின்ஏறுமுகவிலைஇதோடுநிற்காமல், அடுத்தவாரத்திலிருந்துஇன்னும்அதிகரிக்கும்' என, வியாபாரிகள்கூறுகின்றனர்.

இப்போதேதக்காளிவிற்கும்கடைகள்வெறிச்சோடிகாணப்படுகின்றன.அடுத்தவாரம்விலைஅதிகரித்தால்மார்க்கெட்டில்தக்காளிவிற்கும்வியாபாரிகள்எண்ணிக்கையும்கணிசமாககுறைந்துவிடும்.அந்தியூர்ஒழுங்குமுறைவிற்பனைக்கூடத்துக்கு 20 ஆயிரம்தேங்காய்வரத்தானது.சிறியதேங்காய்ஒன்று 1.30 ரூபாய்க்கும், பெரியதேங்காய் 5.20 ரூபாய்க்குஏலம்போனது.இந்தவிலைவிபரப்படிதேங்காய்விலையுடன், தக்காளிவிலையைஒப்பிட்டால், தக்காளிவிலைஅதிகமாகிறது.ஒருகிலோநாட்டுத்தக்காளியில் 14 பழங்கள்இருக்கும்.கலப்பினதக்காளி 16 எண்ணம்இருக்கும்.இதன்படி, ஒருநாட்டுதக்காளிபழத்தின்விலை 2.37 ரூபாய், ஒருகலப்பினதக்காளிபழத்தின்விலை 1.64 ரூபாய்க்குவிற்கப்படுகிறது.ஒருசிறியதேங்காய் 1.30 ரூபாய்க்குமட்டுமேவிலைபோகிறது.இப்படிபார்த்தால்ஒருதேங்காயைவிடஒருதக்காளிபழம்விலைஅதிகரித்திருப்பதுகுறிப்பிடத்தக்கது.

**2.கூட்டுறவுசங்கங்களில் 100 சதபயிர்க்கடன்வசூல்**

ஈரோடு:""வட்டிதள்ளுபடிசலுகையைபயன்படுத்தி42தொடக்கவேளாண்கூட்டுறவு கடன்சங்கங்களில்100சதவீதம்பயிர்க்கடன்வசூல்செய்யப்பட்டுள்ளது,"என,மத்தியகூட்டுறவுவங்கி தனிஅலுவலர்லோகநாதன்பேசினார்.

மொடக்குறிச்சிஅருகேகுளூர்தொடக்கவேளாண்மைகூட்டுறவுகடன்சங்கத்தில், ஈரோடுமாவட்டகூட்டுறவுஒன்றியம்மூலம்நடந்தகல்வித்திட்டமுகாமில்அவர்பேசியதாவது: ஈரோடுமாவட்டமத்தியகூட்டுறவுவங்கியுடன்இணைக்கப்பட்ட 225 தொடக்கவேளாண்கூட்டுறவுகடன்சங்கங்கள்மூலம்கடந்தாண்டு 149.20 கோடிரூபாய்க்குபயிர்க்கடன்வழங்கப்பட்டது.
பயிர்க்கடன்பெறும்விவசாயிகள்கடனைஉரியதவணைதேதியிலோ,

அதற்குமுன்னரோதிருப்பிசெலுத்தினால்வட்டியில்லைஎனவும், வட்டியைஅரசுகூட்டுறவுசங்கங்களுக்குசெலுத்திவிடும்எனவும்அறிவித்தது. இச்சலுகையைவிவசாயிகள்சரியாகபயன்படுத்தி 42 தொடக்கவேளாண்கூட்டுறவுகடன்சங்கங்களில் 100 சதவீதம்பயிர்க்கடன்வசூல்செய்யப்பட்டுள்ளது.கடந்தகாலங்களில்கடன்வசூலில்கடுமையானமுயற்சிஎடுத்தாலும், ஏழுமுதல்எட்டுசங்கங்கள்மட்டுமே 100 சதவீதம்வசூல்செய்துவந்தநிலைஇருந்தது.கடந்தாண்டுவழங்கப்பட்டபயிர்க்கடனில்இதுவரை 124.35 கோடிரூபாயைவிவசாயிகள்உரியதேதியில்செலுத்தியதால், அரசின்வட்டிசலுகையாக 59.86 லட்சம்ரூபாய்கிடைத்துள்ளது.எனவே, விவசாயிகள்பயிர்க்கடன்தள்ளுபடியைஎதிர்நோக்காமல், உரியதவணைதேதியில்கடனைதிருப்பிசெலுத்திபயன்பெறலாம்.இவ்வாறுஅவர்பேசினார்.ஈரோடுமாவட்டகூட்டுறவுஒன்றியதனிஅலுவலர்சோமகாந்தன், பிரச்சாரஅலுவலர்ஆனந்தராஜ், மொடக்குறிச்சிகளஅலுவலர்கந்தசாமிஆகியோர்பேசினர்.உதவிசெயலாளர்ராமசாமிநன்றிகூறினார்.

**பாபநாசத்தில்கால்நடைவிழிப்புணர்வுமுகாம்**

பாபநாசம்:
கால்நடைபராமரிப்புதுறைசார்பில்கால்நடைநோய்விழிப்புணர்வுபயிற்சிமுகாம்பாபநாசம்விவேகானந்தாதொண்டுநிறுவனபயிற்சிகூடத்தில்நடந்தது.

தஞ்சைமண்டலகால்நடைபராமரிப்புத்துறைஇணைஇயக்குனர்பழனியப்பன்பேசுகையில், ""தஞ்சைமாவட்டத்தில்கால்நடைகளுக்குதொண்டைஅடைப்பான், சப்பைநோய்போன்றகொடியநோய்கள்கால்நடைசெல்வங்கள்இறப்புக்குகாரணமாகஉள்ளது. பொதுமக்கள்அருகிலுள்ளகால்நடைமருத்துவமனைக்குசென்றுதடுப்பூசிபோடவேண்டும்.போதுமானதடுப்பூசிகள்அனைத்துமருத்துவமனைகளிலும்கிடைக்கிறது.தற்போதுவைக்கோல்தட்டுபாடுஉள்ளது.இதனைபோக்கதீவனப்புல்உங்கள்தோட்டம்மற்றும்வயல்வரப்புகளில்வளர்க்கலாம்.நாள்ஒன்றுக்கு 350 கிலோவரைஅறுவடைசெய்யலாம்.அஸ்காட்திட்டம்மாநில, மத்தியஅரசுகளின்நிதியுதவியுடன்செயல்படுத்தப்படுகிறது.இதைபயன்படுத்திகொள்ளலாம்,'' என்றார்.

கும்பகோணம்கால்நடைதுறைஉதவிஇயக்குனர்சுப்பையன், கால்நடைநோய்புலனாய்வுபிரிவுடாக்டர்மனோகரன், கால்நடைஇனபெருக்கம்மற்றும்அபிவிருத்திஉதவிஇயக்குனர்கமல்ராஜ்உட்படபலர்பங்கேற்றனர்.

நூற்றுக்கும்மேற்பட்டோர்பயிற்சிபெற்றனர்.விவேகானந்தாதொண்டுநிறுவனசெயலாளர்கண்ண தாசன்நன்றிதெரிவித்தார்.

**சிறப்புகிராமசபாகூட்டம்**

கும்பகோணம்:
கும்பகோணம்அருகேசீனிவாசநல்லூர்பஞ்சாயத்தில்நேற்றுஅரசின்வீட்டுவசதிதிட்டசிறப்புகிராமச பாகூட்டம்நடந்தது.

தலைவர்யசோதாராமலிங்கம்தலைமைவகித்தார்.யூனியன்கவுன்சிலர்சகுந்தலாதனவேல், துணைத்தலைவர்லெட்சுமிஆகியோர்முன்னிலைவகித்தனர்.பஞ்சாயத்துகவுன்சிலர்கள்அஞ்சம்மா ள், கண்ணகி, ஆனந்தி, கலைச்செல்வி, பாலதிரிபுரசுந்தரி, பொதுமக்கள், மகளிர்குழுவினர்பங்கேற்றனர்.தீர்மானபொருளைபஞ்சாயத்துஉதவியாளர்சுப்புலெட்சுமிபடித்தார் . 2010 - 16ம்ஆண்டிற்கானகலைஞர்வீட்டுவசதிதிட்டத்தில்குடிசைவீடுகள்குறித்தகணக்கெடுக்கும்பணியில் குக்கிராமங்கள்மற்றும்தெருக்களில்விடுபட்டிருந்தால்சேர்ப்பதுஎனபடிக்கப்பட்டது. சீனிவாசநல்லூர்பஞ்சாயத்துசீனிவாசநல்லூர், பாங்கல்ஆகியஊர்கள்மட்டுமேஉள்ளது.இதில், தெருக்கள்எதுவும்விடுபடவில்லைஎனதீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

**மரக்கன்றுநடும்விழா**

நாமக்கல்:
வேலகவுண்டம்பட்டிஅரசுமேல்நிலைப்பள்ளியில்உலகசுற்றுச்சூழல்தினத்தைமுன்னிட்டு மரக்கன்றுநடும்விழாநடந்தது.

பள்ளிதலைமையாசிரியர்செல்லமுத்துதலைமைவகித்தார்.உதவிதலைமையாசிரியர்சண்முகம்துவக் கிவைத்தார்.என்.எஸ்.எஸ்., பொறுப்பாளர்அப்துல்வஹாப், தேசியபசுமைப்படைபொறுப்பாளர்மோகன், குடிமக்கள்நுகர்வோர்மன்றபொறுப்பாளர்சக்திவேல்உட்படபலர்பங்கேற்றனர்.

**விவசாயத்திற்குகூடுதல்கடன்இலக்கு..கல்வி, மகளிருக்கும்முக்கியத்துவம்!**

சிவகங்கை: மாவட்டத்தில்விவசாயஉற்பத்தியைஅதிகரிக்கும்வகையில், நடப்புஆண்டில்வங்கிகள்மூலம் 566 கோடி; கல்விகடனாக 50 கோடிரூபாய்வழங்க, இலக்குநிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வங்கிகளில்முன்னுரிமைகடன்களில்விவசாயம்முதலிடம்பெற்றுள்ளது.விவசாயகடன்தரும்சதவீதத்தைபொருத்தே, வங்கிகளின்தரம்நிர்ணயிக்கப்படுகிறது.மாவட்டத்தில்கல்விகடனைவிட, விவசாயகடன்அதிகளவில்வழங்கப்படுகிறது.அடுத்தகட்டமாகசிறு, குறுதொழில்கள், மகளிர்குழுக்களுக்குகடன்தரப்படுகிறது.நடப்புஆண்டில்அதிகளவுவிவசாயகடன்; அடுத்தநிலையில்கல்விகடன்வழங்கதேசியவங்கிகள்இலக்குநிர்ணயித்துள்ளன.கடன்விபரம்: மாவட்டமுன்னோடிவங்கியின்கீழ், 16 தேசியவங்கிகள்செயல்படுகின்றன. இவற்றில் 2009 -10 ல் (டிசம்பர்வரை) 1,885 மாணவர்களுக்கு 33.12 கோடிரூபாய்கடன்வழங்கப்பட்டுள்ளது.விவசாயஉற்பத்தியைஅதிகரிக்க, 3.68 லட்சம்விவசாயிகளுக்கு, பயிர்கடன், நீண்டகாலகடன் ,கிணறுவெட்டுதல், சொட்டுநீர்பாசனம், விவசாயஇடுபொருட்களைவாங்குதல்போன்றவற்றிற்காக 140.16 கோடிரூபாய்வழங்கப்பட்டுள்ளது. மகளிர்குழுவளர்ச்சிக்காக 71 கோடிரூபாய்வழங்கப்பட்டுள்ளது.சிறு, குறுதொழில்களுக்காக 10 ஆயிரத்து 999 பேருக்கு 20.22 கோடிவழங்கப்பட்டுள்ளது.இலக்கு: நடப்புஆண்டில் (2010-11), மாவட்டத்தில் 970.51 கோடிரூபாய்கடன்வழங்கஇலக்குநிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுகடந்தஆண்டைவிடஐந்துசதவீதம்அதிகம்.இதில்விவசாயத்திற்காகமட்டும் 566 கோடி; கல்விக்காக 50 கோடி, மகளிருக்காக 77 கோடிவழங்கப்படும்.இதுகுறித்துமுன்னோடிவங்கிமேலாளர்பெருமாள்கூறுகையில், ""கல்விகடனைகாட்டிலும், விவசாயகடன்அதிகளவில்தரப்படுகிறது.இருப்பினும், கல்விகடன்களுக்கும்முக்கியத்துவம்தரப்படுகிறது.கல்விகடனுக்கானவிண்ணப்பங்களைதடையின்றிவினியோகித்துவருகிறோம்,'' என்றார்.

**பருவமழைஉழவுப்பணிதுவக்கம்**

கிணத்துக்கடவு :கிணத்துக்கடவில்பருவமழைதுவங்கியதால், விவசாயிகள்உழவுபணிகளைதுவக்கியுள்ளனர்.கேரளாவில்கடந்த 9ம்தேதிமுதல்பருவமழைதுவங்கியது. இதனைதொடர்ந்துகிணத்துக்கடவுபகுதியில், பருவமழைதுவங்குவதற்குமுன்னதாக, மேகமூட்டத்துடனும், குளிர்ந்தகாற்றும்வீசியது.நேற்றுமுதல்பருவமழைதூறல்மழையாகதொடர்ந்துபெய்துவருகிறது.இதனைபயன்படுத்திதக்காளி, வெண்டை, பொறியல்தட்டைபயிறு, சோளம்போன்றவைகளைபயிரிடதுவங்கியுள்ளனர்.இதற்காகவிவசாயிகள்உழவுபணியையும்துவக்கிவிட்டனர்.ஏற்கனவேஉழவுபணியைமுடித்தவிவசாயிகள்தக்காளிசாகுபடிசெய்வதற்கு, தக்காளிநாத்துவிடவும்தயராகிவிட்டனர்.

**தேயிலைஉற்பத்திஅதிகரிப்பு**

வால்பாறை

:வால்பாறையில்தென்மேற்குப்பருவமழைதுவங்கியதையடுத்துஎஸ்டேட்டுகளில்தேயிலைஉற்பத்திஅதிகரித்துள்ளது.வால்பாறையில் 50க்கும்மேற்பட்டதேயிலைஎஸ்டேட்டுகள்உள்ளன. பல்வேறுஎஸ்டேட்டுகளில் 50 ஆயிரத்திற்கும்மேற்பட்டமக்கள்வேலைசெய்துவருகின்றனர்.இங்கு, உற்பத்தியாகும்தேயிலைதூள்கோவை, குன்னூர், கொச்சிஆகியஏலமையத்திற்கும், வெளிநாடுகளுக்கும்ஏற்றுமதிசெய்யப்படுகிறது.
வால்பாறைடவுன்மற்றும்எஸ்டேட்பகுதிகளில்கடந்தசிலநாட்களாகதென்மேற்குப்பருவமழைபரவலாகபெய்துவருகிறது.இதனால்தேயிலைசெடிகள்மீண்டும்துளிர்விடத்துவங்கியுள்ளன.

**தேக்கடிபகுதியில்கால்நடைகளால்வனவிலங்குகளுக்குநோய்அபாயம்..!**

கூடலூர்:

தேக்கடிகுடியிருப்புபகுதியில்உள்ளகால்நடைகள்மேய்ச்சலுக்காகவனப்பகுதிக்குசெல்வதால்வனவிலங்குகளுக்குதொற்றுநோய்பரவும்அபாயம்உள்ளது.
தேக்கடிவனப்பகுதியைஒட்டிகுடியிருப்புபகுதிகள்உள்ளன.இங்குள்ளபசு, எருமைஉள்ளிட்டகால்நடைகள்அருகில்உள்ளதேக்கடிபடகுநிறுத்தப்பகுதி, இடையர்பாளையம்உள்ளிட்டவனப்பகுதிவரைமேய்ச்சலுக்காகசெல்கிறது.இப்பகுதிகளில்யானை, மான்கள்உள்ளிட்டவனவிலங்குகள்அதிகமாகவரும்.மேய்ச்சலுக்காகசெல்லும்கால்நடைகள், வனவிலங்குகளைஒட்டியேஉலாவிவருகின்றன.ஆனைவச்சால், கொக்கரக்கண்டம்பகுதியில்மேய்ச்சலுக்குஅனுமதிஅளித்திருந்தபோதிலும், இந்தஇடத்தைவிட்டுவிட்டுவனப்பகுதியில்வனவிலங்குகளுக்குஅருகில்சென்றுமேய்வதால்வனவிலங்குகளுக்குதொற்றுநோய்பரவும்அபாயம்உள்ளது.
தேக்கடிபடகுநிறுத்தப்பகுதியில்வனவிலங்குகளைக்காணசுற்றுலாபயணிகள்ஆர்வமுடன்வருகின்றனர்.இந்தநிலையில், வனவிலங்குகளுக்குஅருகில், குடியிருப்புபகுதியில்உள்ளகால்நடைகளும்இருப்பதால்சுற்றுலாபயணிகள்வனவிலங்குகளைபார்த்துமுழுமையாகரசிக்கமுடியாதநிலைஏற்படுகிறது.
இதனைத்தடுக்கவனத்துறையினர்நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

**மரக்கன்றுநடும்விழா**

தேவதானப்பட்டி:

பெரியகுளம்நெடுஞ்சாலைத்துறைகட்டுப்பாட்டில்உள்ளமாவட்டமுக்கியச்சாலைகள், கிராமஇணைப்புசாலைகளில்மரக்கன்றுகள்நடப்பட்டது.
உதவிக்கோட்டப்பொறியாளர்கோபாலன்தலைமைவகித்தார்.ஒன்றியத்தலைவர்பாண்டின்,

ஊராட்சிதலைவர்சண்முகம்ஆகியோர்மரக்கன்றுகளைநட்டனர்.மரம்நடும்பணிதொடர்ந்துநடந்து வருகிறது.நெடுஞ்சாலைத்துறைஉதவிபொறியாளர்கண்ணன், சாலைஆய்வாளர்கள்கணேசன், ஈஸ்வரன்மற்றும்சாலைப்பணியாளர்கள்பங்கேற்றனர்.

**சமுதாயவானொலிசேவைக்காககிராமங்களில்ஆய்வு**

மாமல்லபுரம் :கல்பாக்கம்சமுதாயவானொலிசேவைக்கானசமூகப்பொருளாதாரஆய்வு, சுற்றுப்புறகிராமங்களில்நடத்தப்பட்டது.அணுசக்திதுறையைச்சேர்ந்தகல்பாக்கம்நிர்வாகக்குழுசார் பில், கல்பாக்கம்சமுதாயவானொலிதுவக்கப்படுகிறது.
வானொலிநிர்வாகக்குழுஅமைத்துஒலிபரப்புஅனுமதிபெறுவதுஉட்படபல்வேறுபணிகள்நடந்துவ ருகின்றன.இந்திராகாந்திஅணுஆராய்ச்சிமையஇயக்குனர்பல்தேவ்ராஜ், பாவினிஅணுமின்திட்டஇயக்குனர்பிரபாத்குமார்ஆகியோர்ஆலோசனைப்படி, வானொலிசேவைப்பணிகள்துரிதப்படுத்தப்பட்டுள்ளன.வானொலிநிர்வாகக்குழுஉறுப்பினர்செய லர்டேனியல்செல்லப்பாகூறியதாவது:முதல்கட்டமாகதகவல்ஒலிபரப்புத்துறையின்அனுமதிகடிதம் பெற்றுள்ளோம்.
பல்வேறுதுறைகளின்அனுமதிகடிதம்மற்றும்கிளியரன்ஸ்பெறுவதற்குநடவடிக்கைதுரிதப்படுத்தப்ப ட்டுள்ளது.  இந்தசேவைக்காகதற்போது, சுற்றுப்புறகிராமங்களில்சமூகப்பொருளாதாரஆய்வுநடத்தினோம்.விவசாயமேம்பாடு, மீன்வளம், கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்புகுறித்துகிராமமக்கள்கருத்துதெரிவித்துள்ளனர்.அணுசக்திதுறைபள்ளிகளைச்சேர்ந் தஆசிரியர்களுக்கு, வானொலிசேவைகுறித்துபயிற்சிஅளித்துள்ளோம்.அனைத்துஅனுமதியும்கிடைத்துவிரைவில்ஒலி பரப்புதுவக்கநடவடிக்கைஎடுத்துள்ளோம்.இவ்வாறுடேனியல்செல்லப்பாகூறினார்.

***உள்நாட்டில் உற்பத்தி அதிகரிக்காததால் பருப்பு வகைகள் இறக்குமதி 10 ஆண்டுகளுக்கு நீடிக்கும்***



*பிரபா ஜெகன்னாதன்*
*புதுடெல்லி*
*மத்திய அரசு, நம் நாட்டில் பருப்பு வகைகள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எனினும் எதிர்பார்த்த அளவிற்கு உற்பத்தி அதிகரிக்கவில்லை. இந்நிலையில் உள்நாட்டு தேவையை ஈடு செய்ய வேண்டுமானால், குறைந்தபட்சம் அடுத்த பத்து ஆண்டுகளுக்கு பல்வேறு பருப்பு வகைகளை குறிப்பிடத்தக்க அளவிற்கு இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் என அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.*
*மேம்பாட்டு திட்டங்கள்*
*கடந்த 2007–08–ஆம் நிதி ஆண்டில் மத்திய அரசு, பருப்பு வகைகள் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ.106 கோடி ஒதுக்கியது. இதனை நடப்பு நிதி ஆண்டில், எட்டு மடங்கு அதிகரித்து, ரூ.837 கோடியாக உயர்த்தியுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் பருப்பு வகைகள் உற்பத்தி மேம்பாட்டுக்காக மொத்தம் ரூ.1,806 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவு ஆண்டுதோறும் மிகக் குறைந்த அளவில்தான் உயர்ந்து வருகிறது. இதனால் மதிப்பீடுகளுக்கு மாறாக பருப்பு உற்பத்தி குறைந்தே காணப்படுகிறது.*
*நடப்பு நிதி ஆண்டில், நம் நாட்டில் பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவு 8 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் ஜூன் 4–ந் தேதி வரையிலான காலத்தில் பயிரிடும் பரப்பளவு 15,000 ஹெக்டேர்தான் உயர்ந்துள்ளது. தற்போது நம் நாட்டில் ஒரு லட்சம் ஹெக்டேருக்கும் குறைவான நிலப்பரப்பில்தான் பருப்பு வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. சென்ற நிதி ஆண்டில் நம் நாட்டில் 1.48 கோடி டன் பருப்பு வகைகள் உற்பத்தியாகி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, முந்தைய ஆண்டைக் காட்டிலும் 2 லட்சம் டன் மட்டுமே அதிகமாகும். நடப்பு ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007–12) கூடுதலாக 20 லட்சம் டன் பருப்பு வகைகள் உற்பத்தி செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கை அடையும் வகையில் ஒரு ஹெக்டேர் வாயிலான உற்பத்தியை தற்போதைய 600 கிலோவிலிருந்து 800 கிலோவாக உயர்த்த திட்டமிட்டுள்ளது.*

*2.38 கோடி டன்*

*இந்தியாவில் பருப்பு வகைகளுக்கான தேவைப்பாடு அதிகமாக உள்ளது. அதே சமயம் உற்பத்தி குறைவாக உள்ளது. எனவே நம் நாடு ஆண்டுதோறும் சராசரியாக 20 முதல் 30 லட்சம் டன் வரை பருப்பு வகைகளை இறக்குமதி செய்து வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் பருப்பு உற்பத்தி 1.57 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் தேவைப்பாடு, இதை விட 42 லட்சம் டன் அதிகமாக, அதாவது 1.99 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நடப்பு நிதி ஆண்டில் நம் நாடு 42 லட்சம் டன் பருப்பு வகைகளை இறக்குமதி செய்தாக வேண்டிய நிலை உள்ளது. அடுத்த பத்து ஆண்டுகளில் உள்நாட்டில் பருப்பு வகைகளுக்கான தேவைப்பாடு 2.38 கோடி டன்னாக அதிகரிக்கும் என அரசு மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.*